# அடியேன் செய்யும் விண்ணப்பம்

(வி. ஸ்ரீநிவாஸபட்டாச்சாரியார், சிங்கப்பூர்)

ஸந்தாபக்னம் ஸகலஜகதாம் சார்ங்கசாபாபிராமம் லக்ஷ்மீவித்யுல்லஸிதமதஸீ குச்சஸச்சாயகாயம்.
வைகுண்டாக்யம் முனிஜனமனச்சாதகானாம் சரண்யம் காருண்யாபம் த்ரிதசபரிஷத் காலமேகம் ததர்ச.

ஸ்ரீமன்நாராயணனுடைய அனுக்ரஹத்தால் அவரை தினமும் நாம் அர்ச்சித்து ஸகல ஸௌபாக்யங்களையும் அடைகிறோம். நம்முடைய அர்ச்சா சாஸ்த்ரத்தை குரு முகமாக அத்யயனம் செய்தால் தான் அதை நன்கு தெரிந்துகொள்ள முடியும் என என்னுடைய பால்ய வயதில் அடியேனுடைய தகப்பனார் அம்மங்குடி ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.வெங்கட்ராம பட்டாச்சாரியார் என்னை ஒப்பியப்பன் ஸன்னிதிக்குச் சென்று அங்கு ஸன்னிதியில் ஆஸ்தான ஸ்ரீவைகானஸ பண்டிதராக இருந்த நம் மஹான் நடார் கோ. ராஜம் பட்டாச்சாரியார் என்கிற ஸ்ரீனிவாஸபட்டாச்சாரியார் ஸ்வாமியிடம் நம்முடைய அர்ச்சா சாஸ்த்ரத்தை கற்றுக்கொள்ள அனுப்பினார். அடியேனுடைய தகப்பனாரின் அனுக்ரஹம் என்னை நடார் ஸ்வாமி சிஷ்யனாக ஏற்று எனக்கு (க்ரந்தாக்ஷரம்) எழுத்து முதல் சப்தம் தாது ஸ்தோத்ரங்கள் ஸூக்தங்கள் ஸ்ரீவைகானஸத்தில் மந்த்ர பாகங்கள் சூத்ரபாகம் ப்ரயோகம் போன்றவற்றை படிப்படியாக ஒன்றும் தெரியாத பச்சிளம் குழந்தைக்கு சொல்க் கொடுப்பது போல பொருமையாகவும் நன்கு புரியும்படியும் சொல்க்கொடுத்தார். ஸம்ப்ரோக்ஷணம் ப்ரம்மோத்ஸவம் ஏதாவது நம்குல ஸ்வாமிகளுடைய ஆத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கும் என்னை அழைத்துச் சென்று மந்த்ரத்தின் க்ரியைகளையும் அப்யாசம் செய்துக் கொடுத்தார். அவருக்கு முடியாத சமயத்திலும்கூட பூமிதேவி ஸமேத ஸ்ரீலவணவர்ஜித வேங்கடேச ஸ்வாமியினுடைய கைங்கர்யத்தில் விடாது ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. என்னுடைய பாக்கியம் எனக்கு ஸ்வாமி குருவாக கிடைத்தது என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் எனக்காக எனது குரு ஸ்ரீ.உ.வே. நா.கோ. ஸ்ரீனிவாஸபட்டாச்சாரியார் இரவும் பகலும் பாராது மந்த்ரங்களையும் அதன் வினியோகத்தையும் அப்யஸித்து என்னை அவருடைய குமாரராகவே பாவித்தார். நான் இரவில் பாடம் கற்றுக்கொள்ள வருகிறேன் என்று ப்ரார்த்தித்தால் உடனே மலர்ந்த முகத்துடன் வந்துவிடு என்று கூறிவிட்டு அரைமணி நேரம் முன்னதாகவே என்னை எதிர்பார்த்து க்ரந்தங்களை வைத்துக்கொண்டு காத்துக்கொண்டு இருப்பார். இவருடைய அனுக்ரஹம் தான் இன்று அடியேனுக்கு இவ்வளவு பெருமைகள் கிடைத்திருக்கிறது. இவர் என்னை விட்டு பிரிந்து ஸ்ரீமத்விகனஸாசார்யன் திருவடியை அடைந்த போது முழுக்க முழுக்க மூன்று நாட்கள் என்ன செய்வது என தெரியாமல் திரிந்தேன். இன்றும் காலையில் மாலையிலும் எனக்கு மனதில் சோர்வு ஏற்படும்போதெல்லாம் அனவரதமும் அவரையே வணங்கி செயல்படுகிறேன். என்னுடைய குருவினுடைய அனுக்ரஹமும் பூமிதேவி ஸமேத ஸ்ரீலவணவர்ஜ்ஜித வேங்கடேச ஒப்பில்லா அப்பனுடைய அனுக்ரமும் தான் இன்று ஒரு ஸன்னிதியில் அனைத்து உத்ஸவங்களையும் ப்ரதிஷ்டையும் செய்யமுடிகிறது. வைகுந்தவாசி எனது குருவினுடைய அனுக்ரஹத் துடனும், எம்பெருமானுடைய அனுக்ரஹத்துடனும் நமது குல ஸ்வாமிகளுடைய அனுக்ரஹத்துடனும் அடியேன் மேன்மேலும் ஸ்ரீசாஸ்த்ர முறைப்படி அர்ச்சா கைங்கர்யத்தில் ஈடுபட அனுக்ரஹிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

இந்த நூற்றாண்டு விழாவை சிறப்பாகச் செய்வதற்கு சிங்கப்பூரில் இருந்து ஒப்பியப்பன்கோவில் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. பி.வி.கிருஷ்ணபட்டாச்சாரியாரையும், சங்கேந்தி டாக்டர் ஸ்ரீ.முத்துபட்டாச்சாரியாரையும், அல்லூர் ஸ்ரீ.எஸ். வெங்கட்ராம பட்டாச்சாரியாரையும் மிகவும் ச்ரமப்படுத்தியுள்ளேன். இந்த விழா சிறப்பாக அமைந்ததற்கு காரணம் அவர்களே ஆவர். இதற்கு வந்து அனுக்ரஹித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.